# பொருளியல் - மாதிரி வினாத்தாள்

12 ஆம் வகுப்பு

காலம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள்: 200

பகுதி - அ

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். **50 x 1 = 50**

**I.** சரியான விடையயைத் தேர்ந்தெடுக்கவும்

1, பொருளியல் என்பது______________அறிவியலாகும்.

அ) இயற்கை ஆ) பருப்பொருள் இ) சமூக ஈ) எவையுமில்லை

2. இந்திய பொருளாதாரம் ஒரு______________பொருளாதாரமாகும்.

அ) பொதுவுடைமை ஆ) முதலாளித்துவ இ) கலப்பு ஈ) தொன்மை

3. பயன்பாடு எனப்து

அ) ஒரு பண்டத்தின் பயன் ஆ) ஒரு பண்டத்தை விரும்புவது

இ) நுகரப்பட்ட பண்ட அலகுகள்

ஈ) மனித விருப்பங்களை நிறைவு செய்யக்கூடிய ஒரு பண்டத்தின் ஆற்றல்

4. தேவை எனப்து ஒரு பண்டத்தை

அ) வாங்குவதற்கான தயார் நிலையைக் குறிக்கும்

ஆ) வாங்குவதற்கான ஆற்றலைக் குறிக்கும்

இ) வாங்குவதற்கான விருப்பமும், முடிவும், வாங்கும் ஆற்றலும் இணைந்த நிலையைக் குறிக்கும்) ஈ) வாங்குக வேண்டுமென்கிற வெறும் விருப்பத்தை மட்டும் குறிக்கும்.

5. சமநிலை எனப்படும் கருத்தமைவு இதனுடன் இணைத்து விளக்கப்படுகிறது.

அ) விலை ஆ) அளிப்பு இ) தேவை ஈ) காலம்

6. வேலைப் பகுப்பு முறை எனும் கருத்தமையை அறிமுகப்படுத்தியவர்

அ) ஆல்ஃபிரடு மரர்ஷல் ஆ) ஆடம்ஸ்மித்

இ) ஜே.எம்.கீன்ஸ் ஈ) ஜே.ஆர்.ஹிக்ஸ்

7. தனியார் செலவிற்கு மற்றொரு பெயர்

அ) உள்ளார்ந்த செலவுகளும் வெளிப்படையான செலவுகளும்

ஆ) சமுதாயச் செலவு இ) வெளிப்படையான செலவு

ஈ) உள்ளார்ந்த செலவு

8. முற்றுரிமை ஏற்படுவது

அ) ஒரே ஒரு உற்பத்தியாளர் இருக்கும்பொழுது

ஆ) ஒரே ஒரு நுகர்வோர் இருக்கும் பொழுது

இ) உற்பத்தியாளர்கள் சிலராக இருக்கும் பொழுது

ஈ) உற்பத்தியாளர்கள் பலராக இருக்கும் பொழுது

9. வாரம் என்பது_____________பயன்படுத்திக் கொள்ள அளிக்கப்படும் விலையாகும்

அ) மூலதனம் ஆ) அமைப்பு இ) உழைப்பு ஈ) நிலம்

10. 'அளிப்பு அதன் தேவையை தாமே உருவாக்குகிறது' - எனக் கூறியவர்

அ) ஆடம்ஸ்மித் ஆ) கீன்ஸ் இ) ஜே.பி.சே. ஈ) ஸ்டோனியர்

11. பணக்கொள்கையை செயல்படுத்துவது

அ) மத்திய அரசு ஆ) மத்திய, மாநில அரசுகள்

இ) நாட்டின் மைய வங்கி ஈ) தனியார் நிறுவனங்கள்

12. வருமான வரி என்பது

அ) நேர்முக வரி ஆ) மறைமுக வரி

இ) நேர்முக, மறைமுக வரி ஈ) சுங்க வரி

13. உள்ளிடு பண்டங்களுக்கும் வெளியிடு பண்டங்களுக்குமுள்ள தொழில்நுட்ப தொடர்பு

அ) செலவுச் சார்பு ஆ) உற்பத்திச் சார்பு

இ) இலாப சார்பு ஈ) வருமான சார்பு

14. சமூகச் செலவை ஏற்றுக் கொள்வது

அ) நிறுவனம் ஆ) உற்பத்தியாளர்

இ) விற்பனையாளர் ஈ) சமுதாயம்

**II.** கோடிட்ட இடங்க்ளை நிரப்புக :

15. கடன் பெறுவதற்கான செலவு உயரும் பொழுது அதனை ___________ பணக் கொள்கை என்றழைப்பர்.

16. தற்கால அரசுகள் ____________ அரசுகளாகும்.

17. செல்வ இலக்கணத்தை தந்தவர் ___________ ஆவார்.

18. முதலாளித்துவ பொருளாதாரம் ______________ பொருளாதாரம் எனவும் வழங்கப்படுகிறது.

19. பயன்பாடு என்பது நுகர்வோரின் ______________ ஐப் பொருத்தது.

20. ஒரு பண்டம் தேவைப்படும் அளவானது அதன் ______________ யுடன் எதிர்மறை தொடர்புடையது.

21. அகச்சிக்கனங்கள் ஒரு நிறுவனத்தின் ___________ விளைவாக உருவாகின்றன.

22. நீண்ட காலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் ______________

23. ஒரு நிறுவனம் உழைப்புக்கு வழங்கும் ஊதியம் _________________ ஆகும்.

24. முற்றுரிமைப் போட்டியில் பண்டங்கள் ஒன்று போன்றவை. ஆனால் ஒரே ___________ ஆனைவ அல்ல.

25. இறுதிநிலைப் பகிர்வுக் கோட்பாடு _______________ விலைக்கோட்பாடு எனவும் அழைக்கப்படுகிறது.

26. பேரியல் பொருளாதாரம் _______________ மாறிகளைப் பற்றி ஆராய்கிறது.

**III.** பொருத்துக :

| | |
|---|---|
| 27. ஐகோஸ் (Oikos) | அ) C.W. காப், P.H.டக்ளஸ் |
| 28, பனிரெண்டாம் நிதிக்குழு | ஆ) நிறைவுப் போட்டி |
| 29. பயன்பாட்டு அலகுகள் | இ) இரண்டு விற்பனையாளர்கள் |
| 30. உண்மை வருமான உயர்வு | ஈ) ஜே. எம். கீன்ஸ் |

| | |
|---|---|
| 31. அங்காடிக்காலம் | உ) இல்லம் |
| 32. ஒருமைத் தன்மையுடைய உற்பத்திச் சார்வு | ஊ) டாக்டர் சி. ரங்கராஜன் |
| 33. போக்குவரத்து செலவின்மை | எ) விலை வீழ்ச்சியின் விளைவு |
| 34. இருவர் முற்றுரிமை | ஏ) துல்லியமாக அளவிடப்படும் பயன்பாடு |
| 35. உழைப்புச் சுரண்டல் | ஐ) மிகக் குறுகிய காலம் |
| 36. நீர்மை விருப்பக் கோட்பாடு | ஒ) கார்ல் மார்க்ஸ் |
| 37. தேவை உந்து பணவீக்கம் | ஓ) அமர்த்தியா குமார் சென் |
| 38. பொருளியலில் நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் | ஔ) மிகைத் தேவை |

**IV.** பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.

39. செல்வ இலக்கணத்தைத் தந்தவர் யார்?
40. பொருளாதார வளர்ச்சி என்பது ஏழைகளுக்கும், எளியோருக்கும் சுதந்திரத்தை தர வல்லது எனக்கூறியவர் யார்?
41. மார்ஷலின் பயன்பாட்டு ஆய்வுக் கோட்பாட்டின் மறுபெயர் யாது?
42. தேவை விதியை முதன்முதலாக உருவாக்கிய பிரான்சு நாட்டு கணிதவியல் வல்லுநரின் பெயர் என்ன?
43. அங்காடிக் காலத்தில் இயந்திரங்களின் அளவு, தொழில் நுட்பம் ஆகியவற்றை மாற்றியமைக்க முடியுமா?
44. மூலதனம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட உற்பத்திக் காரணியாகுமா?
45. டேவிட் ரிக்கார்டோவின் கூற்றுப்படி நிலத்தின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அளிக்கப்படும் ஊதியத்தின் பெயரென்ன?
46. ஓர் அரசின் வருவாய் வரவுகளுக்கும், வருவாய் செலவினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
47. மூன்று துறைப் பொருளாதாரத்துடன் எதனை இணைத்தால் அது நான்கு துறைப் பொருளாதாரம் அல்லது திறந்த பொருளாதாரமாகிறது?
48. மொத்த வருமானத்துக்கும் மொத்த நுகர்வுக்குமுள்ள விகிதத் தொடர்பு என்னவென்று அழைக்கப்படுகிறது?
49. எச்ச உரிமைக் கோட்பாட்டை உருவாக்கியவர் யார்?
50. பேராசிரியர் E.H. சேம்பர்லின் என்பார் அறிமுகப்படுத்திய கருத்தின் பெயர் யாது?

## பகுதி - ஆ

**i)** எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **10 x 3 = 30**

**ii)** ஒவ்வொரு விடையும் நான்கு அல்லது ஐந்து வரிகளில் அமைந்திட வேண்டும்.

51. ஆல்ஃபிரடு மார்ஷலின் நல இலக்கணத்தைக் கூறுக.
52. கலப்புப் பொருளாதாரம் என்பது என்ன?
53. நுகர்வோர் எச்சம் என்றால் என்ன?
54. தேவை விதியைக் கூறுக.
55. சமநிலை விலை பற்றி சிறுகுறிப்பு வரைக.

56. வேலைப் பகுப்பு முறை என்றால் என்ன?

57. பணச் செலவுகள் என்றால் என்ன?

58. 'நிறுவனம்', 'தொழில்' - ஆகிய இரண்டையும் வேறுபடுத்துக.

59. இயல்பு இலாபம் என்றால் என்ன?

60. சே என்பாரின் அங்காடி விதியைக் கூறுக.

61. 'பணம்' - வரையறுக்க.

62. பொதுநிதியியலுக்கு இலக்கணம் கூறுக.

63. 'நுண்ணியல்' பொருளாதாரத்தை வரையறுக்க.

64. உற்பத்திக்காரணிகள் என்பன யாவை?

65. இறுதிநிலை வருவாய் உற்பத்தித் திறன் என்பது யாது?

பகுதி - இ

**i)** எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். **6 x 10 = 60**

**ii)** ஒவ்வொரு விடையும் ஒரு பக்க அளவில் அமைந்திட வேண்டும்.

66. செல்வ இலக்கணத்தின் குறைபாடுகளில் எவையேனும் மூன்றினைச் சுட்டிக் காட்டுக.

67. மொத்த பயன்பாட்டையும் இறுதிநிலைப் பயன்பாட்டையும் வேறுபடுத்துக.

68. அளிப்பு விதியை உரிய வரைபடத்துடன் விளக்குக.

69. 'இயங்கு சமநிலை' - விளக்குக.

70. அகச்சிக்கனமின்மைகள், புறச்சிக்கனமின்மைகள் குறித்து விளக்குக.

71. 'பிற வாய்ப்புச் செலவு' - விளக்குக.

72. முற்றுரிமைப்போட்டியின் இயல்புகள் யாவை?

73. இலாபம் பற்றிய புத்தாக்கக் கோட்பாட்டை விளக்குக.

74. நேர்முகவரிகளுக்கும் மறைமுக வரிகளுக்கும்முள்ள வேறுபாடுகள் யாவை?

75. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை விளக்குக.

பகுதி - ஈ

**i)** எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும், **3 x 20 = 60**

**ii)** ஒவ்வொரு விடையும் மூன்று பக்க அளவில் அமைந்திட வேண்டும்.

76. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகள், தீமைகள் பற்றி விவரி.

77. குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விளக்குக.

78. பல்வேறு விலைத்தேவை நெகிழ்ச்சிகளை, வரைபடங்களின் துணைகொண்டு விளக்குக.

79. குறுகிய கால, நீண்டகால அளவில் நிறைவுப் போட்டியில் சமநிலை விலையும் பண்ட அளவும் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன? உரிய வரைபடம் தருக.

80. தொன்மைப் பொருளாதார வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்திக் கோட்பாட்டை. ஜே.எம்.கீன்ஸ் எவ்வாறு குறை கூறினார்?

81. பணவியல் கொள்கையின் பொருளையும், நோக்கங்களையும் பற்றி விரிவாக எழுதுக.

* * * * * *